| | | |
|---|---|---|
| | மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடக்கு மாகாணம்<br>**Provincial Department of Education, Northern Province** | |

**மாதாந்த மதிப்பீடு**

| தரம் - 08 | புவியியல் | யூலை – 2022 |
|---|---|---|

பகுதி **I**

**மிகச் சரியான விடையின் கிழ் கோடிடுக**

01). ஞாயிற்றுத் தொகுதியின் முழுத் திணிவில் சூரியன் கொண்டிருக்கும் சதவீதம்
1. 99.88%  2. 99.66%  3. 99.86%  4. 99.75%

02). தூரத்தின் அடிப்படையில் சூரியனிலிருந்து ஐந்தாவது இடத்தில் அமைந்துள்ள கோள்
1. செவ்வாய்  2. புவி  3. வியாழன்  4. சனி

03). விண்வெளி தொடர்பான ஆய்வில் திருப்பு முனையை ஏற்படுத்தியவர்
1. குளோடியஸ் தொலமி  2. கலிலியோ கலிலி
3. நிக்கலஸ் கொப்பனிக்கஸ்  4. கெப்லர்

04). சூரியன் புவியை விட எத்தனை மடங்கு பெரியது
1. 47  2. 34  3. 98  4. 109

05). கல்டெக் எனப்படும் வானியல் நிறுவகம் அமைந்துள்ள நாடு
1. ரஷ்யா  2. இந்தியா
3. ஐக்கிய அமெரிக்கா  4. பிரித்தானியா

**தொடர்பு படுத்துக**

| அ | ஆ |
|---|---|
| 06). புதன் | அதிகளவு மேற்பரப்பு வெப்பநிலை |
| 07). சனி | செங்கோள் |
| 08). செவ்வாய் | வளிமண்டலம் இல்லை |
| 09). வெள்ளி | மிகத் தொலைவில் உள்ள கோள் |
| 10). நெப்ரியூன் | இரண்டாவது பெரிய கோள் |



kalvi.lk

**அடைப்புக்குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

11). புவியின் சுழற்சி வேகம் செக்கனுக்கு ............................ ஆகும்.

(11.2 கி.மீ., 8.7 கி.மீ., 9.6 கி.மீ.)

12). முதன் முதலில் விண்வெளி தொடர்பான தகவல்களை ஆய்வு செய்வதற்காக செயற்கைக் கோள் ஒன்றினை விண்வெளிக்கு அனுப்பிய நாடு .............................. ஆகும்.

(ரஷ்யா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான்)

13). புவியின் அச்சானது ........................... சரிவாக அமைந்துள்ளது. ($23.5^0$, $40.5^0$, $17.5^0$)

14). சந்திரனில் கால் பதித்த முதல் மனிதன் ............................................... ஆவார்.

(நியூட்டன், நீல் ஆம்ஸ்ரோங், கெப்லர்)

15). ஞாயிற்றுத் தொகுதியின் அடிப்படையில் ........................................... தோற்றம்பெற்றுளது.

(தற்காப்புக் கலை, சித்திரக் கலை, சோதிடக் கலை)

**16 - 20 வரையான வினாக்களுக்கு சரியானவற்றிற்கு ( √ ) எனவும் பிழையானவற்றிற்குப் (X) எனவும் அடையாளமிடுக.**

16). கிழக்கிலிருந்து மேற்காக சுழலும் கோள்கள் புதனும் வெள்ளியுமாகும். (..........)

17). ஞாயிற்றுத் தொகுதியில் உருப்போலிகள் என அழைக்கப்படுபவை சிறுகோள்கள் ஆகும். (..........)

18). புதன், வெள்ளி ஆகிய கோள்களின் சுற்றுப்பாதையில் மில்லியன் கணக்கான குறுங்கோள்கள் காணப்படுகின்றன. (..........)

19). புறக் கோள்களில் முதலாவது கோளாக வியாழன் காணப்படுகிறது. (..........)

20). ஞாயிற்றுத் தொகுதியானது இற்றைக்கு 4600 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் தோற்றம் பெற்றது. (..........)

(20x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமானதாகும். மேலும் 05 வினாக்களுக்கு விடை தருக.**

01. இலங்கையின் இடவிளக்கப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.
1. இலங்கையின் இடவிளக்கப்படங்களை தயாரிக்கும் திணைக்களம் எது?
2. இலங்கையின் இடவிளக்கப்படங்கள் தயாரிக்கப்பட்ட அளவுத் திட்டம் என்ன?
3. பௌதிக அம்சங்கள் என்றால் என்ன?
4. பண்பாட்டு அம்சங்கள் என்றால் என்ன?
5. இலங்கையின் அதிகூடிய நீள அகலங்களைக் குறிப்பிடுக.

(5x 2 = 10 புள்ளிகள்)

02.
1. ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து நீக்கப்பட்ட கோள் எது?. (01 புள்ளி)
2. அகக் கோள்களையும், புறக் கோள்களையும் பிரிக்கும் வலயது எது? (01 புள்ளி)
3. அகக் கோள்களையும், புறக் கோள்களையும் அட்டவணைப்படுத்துக. (04 புள்ளிகள்)
4. புவிச் சுழற்சி, புவிச் சுற்றுகை என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

03.
1. அதிக சுழற்சிக் காலத்தினையும் குறைந்த சுழற்சிக் காலத்தினையும் கொண்ட கோள்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
2. உப கோள்களைக் கொண்டிராத இரு கோள்களும் எவை? (02 புள்ளிகள்)
3. உப கோள்களைக் கொண்டுள்ள 6 கோள்களையும் உப கோள்களின் எண்ணிக்கையுடன் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
4. சராசரி வெப்பநிலை மறைப் பெறுமானத்தில் கொண்டுள்ள 03 கோள்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

04.
1. அதிக சுற்றுகைக் காலத்தினையும் குறைந்த சுற்றுகைக் காலத்தினையும் கொண்ட கோள்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
2. கோள்களை பருமனின் அடிப்படையில் இறங்குவரிசைப் படுத்துக. (04 புள்ளிகள்)
3. ஞாயிற்றுத் தொகுதியுடன் தொடர்புடைய நம்பிக்கைகள் 04 தருக. (04 புள்ளிகள்)

05.
1. ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி ஆய்வு நிறுவகம் ஒன்று தருக. (01 புள்ளி)
2. விண்வெளி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் நால்வரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
3. ஞாயிற்றுத் தொகுதியுடன் தொடர்புடைய நவீன கண்டு பிடிப்புக்கள் 02 தருக. (02 புள்ளிகள்)
4. பின்வரும் தகவல்களை பௌதிக மற்றும் பண்பாட்டு அம்சங்களாக வேறுபடுத்தி அட்டவணைப்படுத்துக.

(மலைத்தொடர்கள், பிரதான வீதிகள், கட்டடங்கள், நதிகள், காடுகள், குளங்கள், பயிர் நிலங்கள், சமவெளிகள், கால்வாய்கள், புல்நிலங்கள்) (5 புள்ளிகள்)



kalvi.lk

**06. சிறு குறிப்பு எழுதுக.**

1. வெள்ளி
2. புவி
3. வியாழன்
4. புதன்

(4x 2.5 = 10 புள்ளிகள்)

**07. புவி தொடர்பான பின்வரும் தகவல்களைக் குறிப்பிடுக.**

1. சூரியனிலிருந்து தூரம் - ...............................
2. சுழற்சிக் காலம் - ...............................
3. சுழற்சி வேகம் - ...............................
4. சுற்றுகைக் காலம் - ...............................
5. சுற்றுகை வேகம் - ...............................
6. மத்திய கோட்டு விட்டம் - ...............................
7. முனைவு விட்டம் - ...............................
8. சராசரி வெப்பநிலை - ...............................
9. உப கோள் - ...............................
10. மேற் பரப்பளவு - ...............................

(10x 1 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**